பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir — மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 25 செவ்வாய்க்கிழமை 10.08.2021 கதிர் 144

## சடலம் மீட்பு!

(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

யாழ்., கொழும்புத்துறை - உதயபுரம் கடற்கரைப் பகுதியில் இன்று காலை சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது

உதயபுரம் பகுதியைச் சேர்ந்த மனுவல் செபஸ்டியன் வயது 65 என்ற நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை கடலுக்குச் சென்ற ☞ 2

## மாகாணப் பயணக் கட்டுப்பாடு மறு அறிவித்தல் வரை நீடிப்பு

### பொலிஸ் பேச்சாளர் அறிவிப்பு



மாகாணப் பயணக் கட்டுப்பாடு மறு அறிவித்தல் வரை தொடரும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த 24 மணித்தியாலங்களில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 107 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார். ☞ 2

## நாட்டை முடக்குதல் தொடர்பில் இன்னும் எந்த முடிவும் இல்லை

### திருமண நிகழ்வில் 50 பேருக்கே அனுமதி இராணுவத் தளபதி சவேந்திர தெரிவிப்பு

நாட்டை முற்றாக முடக்குதல் அல்லது நாடளாவிய பயணக் கட்டுப்பாடுகள் குறித்து இன்னும் எந்த முடிவும் எடுக்கப் படவில்லை.

- இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவரும் இராணுவத் ☞ 2



# கொரோனாவைச் சமாளிக்க முடியவில்லை; நாட்டை ஒரு மாதத்துக்கு உடன் முடக்குங்கள்

## அரசிடம் சுகாதார அதிகாரிகள் அவசர கோரிக்கை

**இலங்கையில் வேகமாகப் பரவி வரும் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்குக் குறைந்த பட்சம் நான்கு வாரங்களுக்குத் தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவை விதிக்குமாறு சுகாதார அதிகாரிகள், அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

**இது தொடர்பில் சுகாதாரத்துறை தகவல்கள் தெரிவிக்கையில்,**

**கொரோனா நோயாளிகளின் அதிகரிப்பு மற்றும் கொரோனா தொடர்பான இறப்புகள் காரணமாக ஊரடங்கு உத்தரவை விதிப்பது அவசியம். நாட்டின் தற்போதைய நிலைமையை சுகாதாரத் துறையினரால் சமாளிக்க முடியவில்லை.**

☞ 2

### ஜனாதிபதியுடன் கலந்துரையாடிய பின்

## இன்று அல்லது நாளை அதிரடி கட்டுப்பாடுகள்?



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் கலந்துரையாடியதைத் தொடர்ந்து, மக்கள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் வகையிலான பயணக் கட்டுப்பாடுகள் இன்றோ (10) அல்லது நாளையோ (11) விதிக்கப்படலாம் என என்று 'டெய்லிமிரர்' இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

புதிய பயணக் கட்டுப்பாடுகள் அல்லது ஊரடங்கு உத்தரவு குறித்த முடிவுகள் விரைவில் அறிவிக்கப்படும் எனவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா நோயாளிகளின் சடுதியான அதிகரிப்பு மற்றும் அதிகரித்து வரும் இறப்புகள் காரணமாக நாட்டின் சுகாதாரப் பிரிவு வீழ்ச்சியின் விளிம்பில் இருப்பதால் நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவை விதிக்குமாறு சுகாதார நிபுணர்கள் கடும் நெருக்கடியை ☞ 2

## ரிஷாத் பதியுதீனுக்கு விளக்கமறியல் நீடிப்பு



முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிரான வழக்கு முடியும் வரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவல் உத்தரவின் பேரில் விசாரிக்கப்பட்டு வரும் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் இன்று ஆஜர்படுத்தப்பட்டார். ☞ 2

## யாழ். பண்ணைக் கடலில் தவறி விழுந்து பலியான இளைஞருக்குக் கொரோனா!

(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம், பண்ணைக் கடலில் தவறி விழுந்து உயிரிழந்த இளைஞனுக்குக் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

பண்ணைப்பாலத்தடியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை நண்பர்களுடன் பொழுதைக் ☞ 2

## இந்தியாவிலிருந்து வந்த நபர் கட்டாயத் தனிமைப்படுத்தலில்!

(ந.லோகதயாளன்)

கொரோனாப் பரவலுக்கு மத்தியில் இந்தியாவிலிருந்து திருட்டுத்தனமாக படகு மூலம் யாழ்ப்பாணம் திரும்பிய நபர் சுகாதார வைத்திய அதிகாரியால் கட்டாயத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இந்தியாவின் அகதி முகாமில் தங்கியிருந்த குறித்த நபர், கடந்த 8ஆம் திகதி இரவு படகு மூலம் ☞ 2

## யாழ். மேயர் மணிவண்ணனுக்கு எதிராக இரண்டு உறுப்பினர்கள் உண்ணாவிரதம்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாநகர மேயர் மணிவண்ணனுக்கு எதிராக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மாநகர சபை உறுப்பினர்கள் இருவர் உண்ணாவிரதப் போராட்டமொன்றை ஆரம்பித்துள்ளனர்.

ரஜீவ்காந்த், கிருபாகரன் ஆகிய இருவரும் யாழ்ப்பாணம் மாநகர சபை நுழைவாயில் முன்பாக இந்தப் போராட்டத்தை இன்று காலை ஆரம்பித்துள்ளனர்.

சபையின் உறுப்பினரான ரஜீவ்காந்தின் வட்டார அபிவிருத்தி நிதியை அரசியல் பழிவாங்கல் காரணமாக நிறுத்தி வைத்திருக்கும் மேயரின் அராஜகச் செயற்பாட்டைக் கண்டித்தே இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

அதேநேரம், மேயர் திட்டமிட்ட வகையில் அரசியல் பழிவாங்கல் செயற்பாடுகளில் ஈடுபடுவது ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## யாழ். மேயர் மணி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில்தாம்உள்ளூராட்சிஆணையாளர் உள்ளிட்ட பல தரப்பினரிடமும் முறையிட்டுள்ளதாகவும், இதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். தமக்கான உரிய தீர்வு விரைந்து கிடைக்காதவிடத்து தொடர் போராட்டத்தில் ஈடுபடப் போகிறோம் எனவும் அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

## ரிஷாத் பதியுதீனுக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான விசாரணைக்காக கடந்த ஏப்ரல் 24 ஆம் திகதி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் ரிஷாத் பதியுதீன் கைதுசெய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த ஐந்து மாதங்களுக்கும் மேலாக வாக்குமூலங்கள் பெறப்பட்டு வரும் நிலையில், கொழும்பு கோட்டை நீதிவான் பிரியந்த லியனகே முன்னிலையில் இன்று அவர் ஆஜர்படுத்தப்பட்டபோதே நீதிவான் மேற்படி உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

## இன்று அல்லது ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி டெல்டா வைரஸ் வகையால் ஏற்பட்டுள்ளது என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே, உடனடியாகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால், இறப்பு எண்ணிக்கை ஒரு நாளைக்கு 200 ஐத் தாண்டும் என்றும், தினமும் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட புதிய நோயாளிகள் கண்டறியப்படுவார்கள் என்றும் மருத்துவர்கள் கணித்துள்ளனர்.

## கொரோனாவைச் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொரோனா நோயாளிகளின் நாளாந்த எண்ணிக்கை கிட்டத்தட்ட 3 ஆயிரத்தை எட்டியுள்ள அதேவேளை, இறப்பு எண்ணிக்கை ஒரு நாளைக்கு 100 ஐ எட்டியுள்ளது. அதேபோல், கடந்த 13 நாள்களில் கொரோனா சாவு ண்ணிக்கை சுமார் ஆயிரத்தை எட்டியுள்ளது.

மருத்துவமனைகளின் பிரேத அறைகள் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் உடல்களால் நிரம்பி வழிகின்றன. அதே நேரத்தில் மருத்துவமனைகளின் பொது வார்டுகளிலும் கொரோனா நோயாளிகளின் வருகை அதிகரித்துள்ளன.

கொரோனா நோயாளிகளின் தொடர்ச்சியான அதிகரிப்பைக் கட்டுப்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக நிலைமையைக் குறைக்கவும் தொற்று விகிதத்தைக் குறைக்கவும் தேவையான நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட வேண்டும் - என்று சுகாதார அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## நாட்டை முடக்குதல் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் இன்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாகாணங்களுக்கு இடையேயான பயணக் கட்டுப்பாடு இன்று முதல் கடுமையாகக் கண்காணிக்கப்படும்.

அத்தியாவசிய மற்றும் சுகாதாரப் பணியாளர்களைத் தவிர வேறு எவரும் மாகாண எல்லைகளைக் கடக்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.

முன்னர் பரிந்துரைக்கப்பட்ட திருமணத்துக்கு வரும் விருந்தினர்களின் எண்ணிக்கையை 150 பேரில் இருந்து 50 ஆக மட்டுப்படுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது - என்றார்.

## மாகாணப் பயணக் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை மொத்தமாக 53 ஆயிரத்து 804 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

அவர் வெளியிட்டுள்ள நாளாந்த பொலிஸ் அறிவிப்புகளைத் தெரிவிக்கும் காணொலிப் பதிவிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

## சடலம் .............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர் வீடு திரும்பாத நிலையில் இன்று காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று தெரியவருகின்றது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## யாழ். பண்ணைக்............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கழித்துக்கொண்டு இருந்தவேளை தவறி கடலினுள் விழுந்த கே.கௌதமன் (வயது - 31) எனும் இளைஞர் உயிரிழந்திருந்தார்.

இந்நிலையில், அவரது உடல் மறுநாள் திங்கட்கிழமை கண்டெடுக்கப்பட்டிருந்த நிலையில், அவரது சடலத்தில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

அதையடுத்து சுகாதாரப் பிரிவினர் சடலத்தைப் பொறுப்பெடுத்து கோம்பயன் மணல் மயானத்தில் மின் தகனம் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## இந்தியாவிலிருந்து .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்னாரில் வந்து இறங்கி அங்கிருந்து யாழ். குருநகரில் உள்ள வீட்டுக்கு வந்துள்ளார்.

இந்நிலையில், நேற்று பொதுச் சுகாதார உத்தியோகத்தருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் தற்போது அவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டவருக்குப் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.


விளம்பரத் தொடர்புகளுக்கு

தொலைபேசி இலக்கம்- 076 443 8622

**வேலைவாய்ப்பு**

சமையலுக்கு பெண் உதவியாளர் தேவை.

தொடர்புகளுக்கு - 076 740 3814



காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# உரிய வேளையில் செய்யுங்கள்!

கொரோனாப் பிடியில் சிக்குண்டு பதறிப்போய் இருக்கின்றது நாடு.

நாட்டை முடக்கி மக்களைக் காப்பாற்றுங்கள் என்ற குரல் எங்கும் எழுந்துள்ளது. ஆளும் தரப்பை தவிர எல்லோருமே அதனை வற்புறுத்திக் களைத்து விட்டார்கள். ஆனால் ஆட்சித் தரப்போ பிடித்து வைத்த கல்லுப் பிள்ளையார் போல தன்னுடைய நிலைப்பாட்டில் அசையாமல் நிற்கிறது.

சுகாதார – மருத்துவ நிபுணர்கள் வலியுறுத்திக் களைத்து விட்டார்கள் சுகாதாரப் பரிசோதகர்களின் சங்கங்கள், அமைப்புகள் வலியுறுத்திச் சலித்து விட்டன. எதிர்க்கட்சிகள் கெஞ்சி ஓய்ந்து விட்டன.

நிலைமையோ கையை மீறுகின்றது. நாடு மிகமிக மோசமான கட்டத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது. நாடு முழுவதிலும் கொரோனா சமூகத் தொற்றாக மாறி வருகின்றது. நாட்டையும் நகரங்களையும் போக்குவரத்து இன்றி முடக்கினாலன்றி சமூகத் தீயாகப் பரவும் இந்த வைரஸின் வியாபகத்தைத் தடுத்து நிறுத்தவே முடியாது என்பது சாதாரண பாமரனுக்கும் கண்கூடாகத் தெரியும் விடயம்.

தன்னுடைய தவறான கையாள்கையினால் – மோசமான ஆட்சி முறை நிர்வாகத்தினால் – நாட்டின் பொருளாதாரத்தை அதல பாதாளத்தில் வீழ்த்தியிருக்கும் இந்த அரசு, அந்தப் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்க முடியாத இக்கட்டினால், கொரோனா விடயத்தில் தீவிர நிலைப்பாடு எடுத்து அதனை நடைமுறைப்படுத்த முடியாமல் தடுமாறுகிறது. ஒரு மூத்த தலைமுறையே நேரத்துடன் விரைந்து மடிந்து, நம்மை விட்டு பிரியும் பேராபத்து சூழ்ந்து வருகையில் அரசு பார்த்துக் கொண்டு வாளாவிருக்கின்றது. கொரோனாவால் நாடு எக்கேடு கெட்டும் போகட்டும் என்ற மாதிரி அது பொறுப்பின்றி நடந்து கொள்கின்றது.

“நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டால் அதனை எப்பாடு பட்டாயினும் என்றோ ஒரு நாள் மீட்கலாம். ஆனால் இழந்த உயிர்களை மீட்க முடியாது. ஆகையால் பொருளாதாரத்தை முக்கியத்துவப்படுத்துவதை விடுத்து மனித உயிர்களை இழக்க விடாமல் காப்பாற்றுவது குறித்து சிந்தித்துச் செயலாற்றுங்கள்: முடிவெடுங்கள்” – என்று முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தொடக்கம் பலரும் அரசை வற்புறுத்தி விட்டார்கள்.

மருத்துவ நிபுணர்கள், துறை சார்ந்த வல்லுனர்களின் பரிந்துரைப்படி முடிவுகள் எடுக்கப்படுகின்றன என்கின்றது அரசு. ஆனால் யதார்த்தத்தில் பார்த்தால் துறை சார்ந்த நிபுணர்களின் ஆலோசனைகள், எச்சரிக்கைகள், பரிந்துரைகள் கிடப்பில் போடப்பட்டு விடுகின்றன அல்லது செவிடன் காதில் ஊதிய சங்கு போன்றாகிவிடுகின்றன. புறக் குடத்தில் இறைத்த நீராகிவிடுகின்றமையை நேரில் பார்க்கிறோம்.

அவசர சிகிச்சைப் பிரிவுகளின் தேவைப்பாடு உச்சத்தை தொட்டு விட்டது. நோயாளர்களை சமாளிக்க முடியாது சுகாதார வைத்திய துறையே முடங்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள சகல வைத்தியசாலைகளையும் கொவிட் சிகிச்சை நிலையங்களாக மாற்றும் சாத்தியம் குறித்து ஆராயப்படுவதாக சுகாதாரப் பணியகம் தெரிவித்துள்ளது.

கொரோனாத் தொற்றுப் பரம்பலுக்கான சோதனைகள் அதிகரிக்காத நிலையில் தொற்றாளர்கள் எண்ணிக்கை தினசரி மூவாயிரத்தை எட்டியுள்ளது. நாளாந்தம் உயிர்பலி நூறைத் தாண்டிவிட்டது. அது விரைவில் தினசரி இரு நூறை எட்டும் என்கின்றனர் சுகாதாரத் துறையினர்.

ஆனால் அரசு அசைந்து கொடுப்பதாகவோ, பதவி அடிப்பதாகவோ இல்லை.

அவசர நிலையிலும் கூட நாட்டை முடக்குவது குறித்து தீர்மானம் ஏதும் இல்லை.

நாட்டில் கொவிட் தொற்றுப் பரவல் நிலைமை தீவிரமடையும்போது எடுக்கப்பட வேண்டிய தீர்மானங்கள் தொடர்பில் அரசிடம் பல மாற்றுத் தெரிவுகள் உண்டு, அதில் நாட்டை முழுவதும் முடக்குவதும் ஒன்று, எனினும் பொருத்தமான சந்தர்ப்பத்தில் சரியான முடிவை அரசு எடுக்கும் என்று சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்திருக்கிறார். நாட்டை முடக்கும் தீர்மானம் இதுவரை இல்லை, ஆனால் முடிவுகள் ஒரு சில மணித்தியாலங்களில் சூழலுக்கேற்ப மாறலாம் என்று தொற்றுத் தடுப்பு செயலணியின் பிரதிநிதி ஒருவர் கூறியிருக்கிறார். இவ்வளவு தூரம் மோசமடைந்து, வைரஸ் பரவி, நாடு எங்கும் சமூகத் தொற்றாக வியாபித்த பின்னர் காலதாமதமாகி நாட்டை முடக்கி என்ன பயன்? குதிரை ஓடிய பின்னர் லயத்தை மூடும் அறிவு கெட்ட தனமாகதான் அது இருக்கும் போல.

# வவுனியா வைத்தியசாலையில் ஒருநாள் மட்டுமா விடுமுறை?

## மன உளைச்சலில் தாதியர்கள்

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் பணிபுரியும் வெளிமாவட்டங்களைப் சேர்ந்த தாதியர்கள் தொடர்ச் சியாக விடுமுறை எடுக்க முடியாது எனவும் வாரத்தில் ஒரு நாள் மட்டுமே விடுமுறை எடுக்க முடியும் எனவும்வைத்தியசாலையில் இடம் பெற்ற கூட்டத்தில் வைத்தியசாலைபணிப்பாளர் தெரி வித்துள்ளார் என தாதியர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

வைத்தியசாலையில் பணிபுரியும் தாதியர்களுக்கு ஒவ்வொரு வாரமும் ஞாயிறு தினத்தில் மட்டுமே விடுமுறை வழங்கப்பட்டு வருவது வழமையானதாகும். அந்த வகையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் வெளி மாவட்டங்களில் இருந்து வருகை தந்து விடுதிகளில் தங்கியிருந்து சேவையாற்றும் தாதியர்களே அதிகமாக இருக்கின்றார்கள்.

இவர்களுக்கு வாரத்தில் ஒருநாள் வழங்கப்படும் விடுமுறையில் இவர்கள் வீட்டுக்குச் செல்ல முடியாது. இதனால் ஒரு மாதத்தில் வரும் விடுமுறை நாள்களில் சேவையாற்றி பின்னர் விடுமுறை நாளில் சேவையாற்றிய நாள்களையும் சேர்த்துக் குறைந்தது ஐந்து நாள்கள் மாதம் ஒன்றில் விடுமுறை எடுத்து தமது சொந்த இடங்களுக்குச் சென்று வருவார்கள்.

இதுவே அனைத்து மாவட்ட வைத்தியசாலைகளிலும் கடைப்பிடிக்கப்பட்டு வரும் முறையாகும். வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையிலும் இவ்வாறே நடைமுறையிலிருந்தது.

ஆனால் திடீரென இவ்வாறு மாதத்தில் தொடர்ச்சியான விடுமுறை தரமுடியாது எனவும், வாரத்தில் வருகின்ற ஒரு நாள் மட்டுமே விடுமுறை எடுக்கமுடியும் எனவும் விடுதி தாதியர்களுக்கான கூட்டத்தில் வவுனியா வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவித்துள்ளார் எனத் தாதிய பரிபாலகர் கூறியுள்ளார்.

இதனால் வெளி மாவட்டங்களிலிருந்து வந்து வவுனியா வைத்தியசாலையில் பணிபுரியும் தாதியர்கள் பெரும் மன உளைச்சலுக்கு உள்ளாகியிருக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக வைத்தியசாலைபணிப்பாளர் கவனத்திலெடுத்து தாதியர்களின் நலனுக்காக வழிவகை செய்து தருமாறு தாதியர்கள் தெரிவித்துள்ளனர்.



# அதிக விலைகளுக்கு பொருள்களை விற்பனை செய்பவர்களுக்கு ஒரு லட்சம் ரூபா அபராதம்

நிர்ணய விலையை விட அதிக விலையில் பொருள்களை விற்பனை செய்பவர்களுக்கு அபராதம் விதிக்கப்படவுள்ளதென அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அதற்கமைய அதிக விலையில் பொருள்கள் விற்பனை செய்யும் வர்த்தகர்களைசுற்றிவளைக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலையில் பொருள்களை விற்பனை செய்பவர்களுக்கு 2 ஆயிரத்து 500 – ஒரு லட்சம் ரூபா வரையில் அபராதத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது. அதற்கு அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளதாக வர்த்தக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# ஸ்புட்னிக் வி தடுப்பூசியின் அடுத்த பங்கு தொடர்பில் நிச்சயமற்ற நிலை



இலங்கைக்கு இறக்குமதி செய்ய திட்டமிடப்பட்ட ஸ்புட்னிக் வி தடுப்பூசிகளின் அடுத்த பங்குகள் தொடர்பில் நிச்சயமற்ற நிலையுள்ளதாக சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் ஜெனரல் வைத்தியர் ஹேமந்த ஹேரத் கூறினார்.

தேவையான பங்குகள் கிடைக்காத பட்சத்தில் அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பாகத் தீர்மானம் மேற்கொள்ள ஏற்கனவே ஆலோசனைகள் நடத்தப்பட்டு வருகின்றன எனவும் அவர் கூறினார். ரஷ்யாவின் ஒரு சூழ்நிலையின் விளைவாக தடுப்பூசியின் அதிக பங்குகளைப் பெறுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவின் படி, ஒரு லட்சத்து 59 ஆயிரத்து 81 பேருக்கு ஸ்புட்னிக் வி தடுப்பூசியின் முதல் டோஸ் வழங்கப்பட்டுள்ளது. இதற்கிடையில், ஸ்புட்னிக் வி தடுப்பூசியின் 14 ஆயிரத்து 516 டோஸ்கள் மட் டுமே இரண்டாவது டோஸாக இதுவரை வழங்கப்பட்டுள்ளன.

# தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளை ரணில் விமர்சனம் செய்யவில்லை

## பாலித ரங்கே பண்டார தெரிவிப்பு



தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க விமர்சனம் செய்யவில்லை என கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

கொவிட் 19 நோய்த் தொற்றுக்கு எதிராக இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்டு வரும் தடுப்பூசி ஏற்றும் திட்டத்தை ரணில் விமர்சிக்கவில்லை எனவும், கொவிட் தடுப்பு செயலணிக்கு மருத்துவத்துறையினர் தலைமை தாங்க வேண்டும் என்றே ரணில் கோரினார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவின் கருத்து குறித்து பதிலளிப்பதற்கு முன்னதாக அவர் என்ன பேசினார் என்பதைக் கேட்டு தெரிந்து கொண்டு இராணுவத் தளபதி சவேந்திர பேச வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



# மேற்கு ஆபிரிக்காவில் புதிய கொடிய வைரஸ்; உலக சுகாதார அமைப்பு அதிர்ச்சித் தகவல்

மேற்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான கினியாவில் மார்பர்க் என்னும் புதிய கொடிய வைரஸ் கண்டறியப்பட்டுள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. எபோலா, கொவிட் – 19 போன்று இதுவும் விலங்கிலிருந்து மனிதர்களுக்கு பரவும் தன்மை கொண்டது.

வௌவால்களிலிருந்து பரவும் மார்பர்க் வைரஸ் நோய் 88 சதவிகித இறப்பு விகிதத்தை கொண்டுள்ளது. கடந்த ஓகஸ்ட் 2ஆம் திகதி, தெற்கு குக்கெடோ மாகாணத்தில் மார்பர்க் வைரஸ் நோய் காரணமாக இறந்த நோயாளியின் மாதிரிகள் பரிசோதனைக்குட்படுத்தியதில் இந்த கொடிய வைரஸ் பாதிப்பு கண்டறியப்பட்டு இருப்பதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

கினியாவில் எபோலா நோய் முடிவுக்கு வந்துவிட்டதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்து 2 மாதங்களே ஆகியுள்ள நிலையில், புதிய மார்பர்க் வைரஸ் கண்டறியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டு இருப்பது அச்சத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

# ஜப்பானை மிரட்டும் லூபிட் புயல்:

## மூன்று லட்சம் பேரை பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்ற உத்தரவு



சீனா மற்றும் தாய்வானில் பெரும் சேதங்களை ஏற்படுத்திய லூபிட் என்கிற சக்தி வாய்ந்த புயல் தற்போது ஜப்பானை மிரட்டி வருகிறது. இந்தப் புயல் ஜப்பானின் தெற்கு மற்றும் தென் மேற்கு பிராந்தியங்களை கடுமையாக தாக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

லூபிட் புயல் கரையை கடக்கும்போது மணிக்கு 82 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் எனவும், கடல் மிகவும் கொந்தளிப்புடன் இருக்கும் எனவும் கூறப்பட்டுள்ளது.

இதனிடையே ஜப்பானின் ஹிரோஷிமா, ஷிமனே மற்றும் எஹிம் ஆகிய 3 பிராந்தியங்களிலும் லூபிட் புயலின் தாக்கம் தீவிரமாக இருக்கும் என ஜப்பான் வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

புயல் காரணமாக கனமழைக்கு வாய்ப்பு உள்ளதால் அங்கு வெள்ளம் மற்றும் நிலச்சரிவு போன்ற இயற்கை பேரிடர்கள் நிகழும் அபாயம் உள்ளன என எச்சரிக்கப்பட்டுள்ளது.

எனவே முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மேற்கூறிய 3 பிராந்தியங்களில் இருந்து 3 லட்சத்துக்கும் அதிகமான மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்ற உத்தரவிடப்பட்டுள்ளது. இதனிடையே லூபிட் புயல் அச்சுறுத்தல் காரணமாக ஜப்பானின் தெற்கு மற்றும் தென் மேற்கு பகுதிகளில் நூற்றுக்கும் மேற்பட்ட விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

## அமெரிக்காவில் ஆஸ்பத்திரிகள் நிரம்பி வழிகின்றன;

# நாள்தோறும் 1 லட்சம் பேர் பாதிப்பு




கொரோனா பாதிப்பு எண்ணிக்கையில், உலக அளவில் அமெரிக்கா தொடர்ந்து முதல் இடத்தில் இருக்கிறது. அங்கு கொரோனாத் தடுப்பூசி அதிக வேகத்தில் போடப்பட்டது. 18 வயதுக்கு மேற்பட்டோரில் சுமார் 70 சதவீதம் பேர் தடுப்பூசி போட்டுக்கொண்டுள்ளனர். அப்படி இருந்தும் சமீபநாள்களாக அமெரிக்காவில் கொரோனா மீண்டும் கோர தாண்டவம் ஆடி வருகிறது. நாள் ஒன்றுக்கு சராசரியாக 1 லட்சம் பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். அதனால், மீண்டும் கட்டுப்பாடுகள் அமுலுக்கு வந்துள்ளன. இதற்கு உருமாறிய கொரோனா வகையைச் சேர்ந்த டெல்டா வைரஸ் தான் என்று கருதப்படுகிறது. ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்படுபவர் கள் எண்ணிக்கையும் மளமளனெ அதிகரித்து வருகிறது. அதனால், ஆஸ்பத்திரிகள் நிரம்பி வழிகின்றன. கடந்த மாதத்தில் நாள் ஒன்றுக்கு 12 ஆயிரம் பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட நிலையில், தற்போது 43 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் ஆஸ்பத்திரியில் சேர்ந்து வருகிறார்கள்.

புளோரிடா ஆஸ்பத்திரி சங்கத்தின் தலைமை செயல் அதிகாரி மேரி மேஹியு கூறுகையில், "தடுப்பூசி போடாதவர்களை டெல்டா வைரஸ் வேகமாக தாக்கி வருகிறது. ஜாக்சன் வில்லே, ஆர்லாண்டோ ஆகிய நகரங்களில் உள்ள ஆஸ்பத்திரிகளில் கடந்த வாரம் நோயாளிகள் வருகை உச்சத்தை தொட்டது" என்றார். டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள ஆஸ்பத்திரிகளில் ஒரே நாளில் 5 ஆயிரம் பேர் அனுமதிக்கப்பட்டனர். ஹூஸ்டன் நகர ஆஸ்பத்திரிகளின் அவசரகால அறைகளில் படுக்கை இருப்பை தாண்டி நோயாளிகள் குவிந்து விட்டனர். ஒரு ஆஸ்பத்திரியில் நடைபாதையிலும், காத்திருப்பு அறையிலும் வைத்து சிகிச்சை அளித்து வருகிறார்கள்.

நோய் பாதிப்பு குறைவாக இருந்தால், காத்திருப்பு அறையில்தான் இடம் கிடைக்கும் என்று ஒரு அதிகாரி தெரிவித்தார். இதுபோல், குழந்தைகள் ஆஸ்பத்திரிகளிலும் படுக்கைகள் வேகமாக நிரம்பி வருகின்றன.

தடுப்பூசி போட்டவர்களுடன் ஒப்பிடுகையில், தடுப்பூசி போடாதவர்களுக்கு தொற்று பாதிக்க 19 மடங்கு வாய்ப்பு அதிகம் என்று ஆய்வில் தெரிய வந்துள்ளது. எனவே, ஆரோக்கியமானவர்கள், இளைஞர்கள் போன்ற ஆபத்து இல்லாத நபர்களும் தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும் என்றும், இல்லாவிட்டால் அவர்கள் மறைமுகமாக மற்றவர்களுக்கு தொற்றை பரப்ப வாய்ப்புள்ளது என்றும் அமெரிக்க தொற்று நோயியல் நிறுவனத்தின் இயக்குநர் அந்தோணி பவுசி கேட்டுக்கொண்டுள்ளார்.

# உலகம் முழுவதும் கொரோனாவால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 20.40 கோடியைத் தாண்டியது

உலகம் முழுவதும் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டு வருபவர்களின் எண்ணிக்கையும், உயிரிழப்போரின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. தடுப்பூசி செலுத்தும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வரும் நிலையிலும் கொரோனா பரவல் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.



இந்நிலையில் தற்போதைய நிலைவரப்படி, உலகம் முழுவதும் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 20.40 கோடியை தாண்டியுள்ளது. இதன்படி உலகம் முழுவதும் தற்போது 20,40,97,606 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. கொரோனா பாதிப்பில் இருந்து இதுவரை 18,32,75,519 பேர் குணமடைந்துள்ளனர். மேலும் வைரஸ் தாக்குதலுக்கு இதுவரை 43 லட்சத்து 15 ஆயிரத்து 486 பேர் உயிரிழந்துள்ளனர்.

கொரோனாத் தொற்றுக்கு தற்போது 1,65,06,601 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை பெறுபவர்களில் 99,081 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

**கொரோனா அதிகம் பரவிய நாடுகள்:-**

அமெரிக்கா -பாதிப்பு-3,67,79,522, உயிரிழப்பு - 6,33,797, குணமடைந்தோர் - 2,99,21,980

இந்தியா - பாதிப்பு - 3,19,97,017, உயிரிழப்பு - 4,28,715, குணமடைந்தோர் - 3,11,73,383

பிரேஸில் - பாதிப்பு - 2,01,78,143, உயிரிழப்பு - 5,63,707, குணமடைந்தோர் - 1,89,39,051

ரஷ்யா - பாதிப்பு - 64,69,910, உயிரிழப்பு - 1,65,650, குணமடைந்தோர் - 57,69,981

பிரான்ஸ் - பாதிப்பு - 63,10,933 உயிரிழப்பு - 1,12,288, குணமடைந்தோர் - 57,77,842

**தொடர்ந்து கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளின் விவரம்:-**

இங்கிலாந்து -60,94,243, துருக்கி -59,42,271, ஆர்ஜென்டினா-50,29,075, கொலம்பியா-48,43,007, ஸ்பெயின் -46,27,770, இத்தாலி -44,00,617, ஈரான்-41,99,537, ஜேர்மனி-38,00,048, இந்தோனேஷியா- 36,86,740, மெக்சிக்கோ -29,71,817

INDIVIDUAL
ENGLISH CLASSES
K. GANESH (BA. Pera)
அடிப்படையில் இருந்து
ஆங்கிலம் பேச விரும்புவோர்
Grammar - Spoken
English Medium
செய்பவர்கள்
Grade - from 7 to 11 வரை
பட்டதாரிகள்,
தொழில் புரிபவர்கள்

077 766 8725
நீராவியடி, யாழ்ப்பாணம்

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இந்தியாவில் தினசரி கொரோனா பாதிப்பு முப்பதாயிரத்தை விடக் குறைந்துள்ளது



இந்தியாவில் கொரோனாத் தொற்றின் 2ஆவது அலை ஓய்ந்து வந்த நிலையில், கடந்த ஓரிரு நாள்களாக தினசரி பாதிப்பு சற்றே ஏறுமுகம் கண்டுவந்தது. இது மக்களிடையே பீதியை உண்டுபண்ணியது. இந்த நிலையில், இன்று இந்திய மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள தகவலின் அடிப்படையில், இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில் புதிதாக 28 ஆயிரத்து 204 பேருக்கு மட்டுமே தொற்று பாதிப்பு உறுதியாகி உள்ளது. இதன்மூலம் மொத்த கொரோனா பாதிப்பு எண்ணிக்கை 3,19,98,158 ஆக அதிகரித்துள்ளது.

தொற்றுப் பாதிப்புகளுக்கு ஒரே நாளில் 373 பேர் உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தோர் மொத்த எண்ணிக்கை 4,28,682 ஆக உயர்ந்துள்ளது. உயிரிழந்தோர் வீதம் 1.34% ஆக உள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் கொரோனா பாதிப்பில் இருந்து 41,511 பேர் மீண்டு, வீடு திரும்பியுள்ளனர். இதனால், குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3,11,80,968 ஆகவும், குணமடைவோர் வீதம் 97.45 ஆகவும் உயர்ந்துள்ளன.

இந்தியாவில் இதுவரை 51 கோடியே 45 லட்சத்து 268 கொரோனாத் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன எனவும் இந்திய மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மேகதாதுவில் அணை கட்டும் திட்டத்துக்கு அ.தி.மு.கவின் தம்பிதுரை கடும் எதிர்ப்பு



கர்நாடக அரசின் சர்ச்சைக்குரிய மேகதாது அணைத் திட்டத்திற்கு மத்திய அரசு அனுமதி அளிக்கக் கூடாது என்று மாநிலங்களவையில் நேற்று அ.தி.மு.க. மாநிலங்களவை குழுத் தலைவர் தம்பிதுரை வலியுறுத்தியிருக்கிறார். தமிழ்நாட்டின் உரிமைகள் பாதிக்கப்படக் கூடாது எனவும், கர்நாடக அரசு உச்சநீதி மன்றத் தீர்ப்பை மீறி காவிரி நதியில் மேகதாது அணை கட்டக் கூடாது எனவும் கூறி, மேகதாதுவில் அணை கட்டும் திட்டத்துக்கு அவர் கடும் எதிர்ப்பு தெரிவித்தார்.

காவிரி நதிநீர் பங்கீட்டில் தமிழ்நாட்டின் உரிமைகள் பறிபோகக் கூடாது என மாநிலங்களவையில் மத்திய அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில் அறிக்கை தாக்கல் செய்தார் தம்பிதுரை. கர்நாடக அரசு மேகதாது அணை கட்டினால், தமிழக விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள் என்றும், காவிரி டெல்டா பகுதியில் விளைச்சல் குறைந்துவிடும் எனவும் தம்பிதுரை விளக்கினார்.

காவிரி டெல்டா பகுதி தமிழகத்தின் நெற்களஞ்சியமாக உள்ளது. தமிழகத்தின் உணவுப் பொருள் உற்பத்திக்கு இந்த விவசாய மண்டலம் முக்கிய பங்களிப்பை தொடர்ந்து அளித்து வருகிறது.

ஏற்கெனவே தமிழ்நாட்டில் தண்ணீர் பற்றாக்குறை இருக்கும் நிலையில், மேகதாது திட்டம் அமுலானால், அது தமிழகத்தை மேலும் பாதிக்கும். குறிப்பாக காவிரி டெல்டா பகுதி மிகவும் கடுமையான பாதிப்பை சந்திக்க வேண்டிவரும் என அவர் வலியுறுத்தினார்.

மழைக்காலக் கூட்டத்தொடரின் ஆரம்பம் முதலே தினசரி நாடாளுமன்றத்தில் அமளி காரணமாக ஒத்திவைப்புகள் நடைபெறுவதால், தமிழகநாடாளுமன்றஉறுப்பினர்கள், மேகதாது அணைத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்க உரிய வாய்ப்புகள் கிட்டவில்லை. இந்தநிலையில், தம்பிதுரைக்கு நேற்று முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் குறித்து பேச வாய்ப்பு கிடைத்த நிலையில், அவர் மேகதாது அணைத் திட்டத்திற்கான கடும் எதிர்ப்பை பதிவு செய்திருக்கிறார்.

# மேகதாது அணை விவகாரம்; மத்தியஅமைச்சர்கள் ஒப்புதல்

## கர்நாடக முதலமைச்சர் தெரிவிப்பு



மேகதாது அணை கட்டுவது தொடர்பாக விரைவில் டெல்லிசென்றுமத்தியஅமைச்சர்களைச் சந்தித்துப் பேச இருக்கின்றோம் என கர்நாடக முதலமைச்சர் பசவராஜ் பொம்மை தெரிவித்துள்ளார்.

மேகதாது அணை கட்டுவது தொடர்பாக விரிவான திட்ட அறிக்கையை மத்திய அரசிடம் சமர்ப்பித்துள்ளோம். நான் டெல்லி சென்றபோது மத்திய அரசினர் இது பற்றி பரிசீலிப்பதாக தெரிவித்தனர். விரைவில் மீண்டும் நான் டெல்லி செல்லவுள்ளேன். மத்திய அமைச்சர்களையும் சந்திக் கவுள்ளேன்.

சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு பற்றியும் தற்போதைய நிலைவரம் குறித்தும் விரிவாக விளக்கவுள்ளேன். மேகதாதுஅணைக்குஒப்புதல்தருகிறோம் என நான் டெல்லி சென்றபோது அமைச்சர்கள் கூறினார்கள் என்று அவர் தெரிவித்திருக்கிறார்.



# வருவாய் பற்றாக்குறை காரணமாக எளிய மக்கள்மீது வரிச்சுமை ஏற்றப்படாது என நம்புகிறோம்: திருமாவளவன்

வருவாய்ப் பற்றாக்குறை காரணமாக ஏழை, எளிய மக்களின் மீது தி.மு.க. அரசு வரிச்சுமையை அதிகரிக்காது என தான் நம்புகிறேன் என விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

டெல்லியில் ஊடகவியலாளர்களைச் சந்தித்த திருமாவளவன், "ஏழை எளிய நடுத்தர மக்களின் மீது வரிச்சுமையைச் சுமத்தாமல், பொருளாதாரத்தில் வலிமையடைந்த, முன்னேறிய பிரிவினர் வரி செலுத்தும் வகையிலான பட்ஜெட்டை தி.மு.க. அரசு தாக்கல் செய்யும் என நம்புகிறோம்.

நிதிச்சுமையைச் சமாளிப்பதற்கு வேறு வழியில்லை என்கின்ற அடிப்படையில், மக்களுக்கு எதிரான திட்டங்களில் தி.மு.க. அரசு கவனம் செலுத்தாது என நம்புகிறோம். குறிப்பாக, மதுக்கடைகளை நம்பி வருவாயை மேம்படுத்துவதற்கு தி.மு.க. அரசு திட்டங்களைத் தீட்டாது" என்று அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

# மனித மாண்பு, உரிமைகளுக்கு பொலிஸ் நிலையங்கள் அச்சுறுத்தல்

## சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி வேதனை



நாட்டில் புனிதமாக இருக்க வேண்டிய பொலிஸ் நிலையங்கள் தான் மனித உரிமைகளுக்கும் மாண்புக்கும் மிகப்பெரிய அச்சுறுத்தல் விளைவிக்கும் இடமாக இருக்கின்றன என்று இந்திய சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி என். வி.ரமணா வேதனை தெரிவித்துள்ளார்.

டெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய என்.வி. ரமணா, நாட்டில் புனிதமாக இருக்க வேண்டிய பொலிஸ் நிலையங்கள் மனித உரிமைகளுக்கும், மாண்புக்கும் மிகப்பெரிய அச்சுறுத்தலாக மாறியுள்ளன. சமீபத்திய அறிக்கைகளின்படி, சமூகத்தில் சிறப்புச் சலுகை பெற்றவர்கள்கூட பொலிஸாரின் மூன்றாம் தரமான நடத்தையிலிருந்து தப்பவில்லை. அரசியலமைப்புச் சட்டம் பாதுகாப்பு அளித்தும் உரிமைகள் அளித்தும் பொலிஸ் கஸ்டடி கொடுமை, பொலிஸ் அட்டூழியங்கள் தொடர்ந்து வருகின்றன.

அதிகம் செலவாகக்கூடிய செயல்முறைகளை நீதிமன்றங்கள் கடைப்பிடிப்பதால், ஏழைகளும் பாதிக்கப்படக்கூடிய பிரிவில் உள்ள மக்களும் தமக்கான நீதி கிடைப்பதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்காமல் விலகிவிடுவார்கள். இந்தத்தடைகளைத்தகர்ப்பதுதான் நீதித்துறையின் கடினமான சவாலாக இன்று இருக்கிறது என்று வேதனை தெரிவித்துள்ளார்.

# அபாய எல்லையைத் தாண்டி கங்கை, யமுனை ஆறுகளில் வெள்ளம்; 350 கிராமங்கள் பாதிப்பு

இந்தியாவில் முக்கிய நதிகளில் ஒன்றான யமுனை ஆறு இமயமலையில் உற்பத்தியாகி ஹரியானா, டெல்லி மாநிலங்கள் வழியாக ஓடி உத்தரப்பிரதேச மாநிலம் அலகாபாத்தில் கங்கை நதியுடன் கலக்கிறது. யமுனை நதியில் மழைக் காலங்களில் அதிக அளவில் வெள்ளம் வருவதுண்டு.

தற்போது இமயமலைப் பகுதியிலும் இதன் நீர்ப்பிடிப்புப் பகுதியான வட மாநிலங்களிலும் பலத்த மழை பெய்து வருகிறது. இதனால், கங்கை, யமுனை ஆகிய இரு ஆறுகளிலும் அபாய கட்டத்துக்கு மேலாக நீர் ஓடுகிறது.



உத்தரப் பிரதேசத்தில் பெய்த தொடர் மழை காரணமாக 357 கிராமங்கள் வெள்ள நீரால் பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக ஹமிர் புர் மற்றும் ஜலுன் மாவட்டங்கள் வெள்ளத்தால் மிகக்கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் நேற்று உலங்கு வானூர்தி மூலம் ஆய்வு செய்தார். வழக்கமாக குறைவாக மழை பெய்யும் பந்தல்கண்ட் பிராந்தியப் பகுதியும் இம்முறை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. ஐந்து இடங்களில் யமுனை ஆறு அபாய கட்ட அளவுக்கு மேலாக ஓடுகிறது.

மூன்று மாவட்டங்களில் கங்கை ஆற்றில் அபாய கட்டத்துக்கு மேல் நீர் ஓடுகிறது. 97 கிராமங்கள் வெள்ள நீரால் சூழப்பட்டு முற்றிலும் துண்டிக்கப்பட்டுள்ளன. ஆறுகளில் நீர் மட்டம் அபாய கட்டத்தைத் தாண்டியுள்ளதால், யோகி ஆதித்யநாத் தலைமையிலான உத்தரப்பிரதேச அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கையை முடுக்கி விட்டுள்ளது.

# கிழக்கில் ஒன்பது லட்சம் தடுப்பூசிகளில் 8 லட்சம் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுவிட்டன

கிழக்குமாகாணத்திற்கென கிடைக்கப்பெற்ற 9 லட்சம் தடுப்பூசிகளில் இதுவரை 7லட்சத்து 89ஆயிரத்து 150 தடுப்பூசிகள் ஏற்றப்பட்டு விட்டனஎனகிழக்குமாகாணசுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஏ.ஆர்.எம்.தௌபீக் தெரிவித்தார்.

கிழக்குமாகாணத்தில் இதுவரை 23,340 தொற்றுகளும் 415 மரணங்களும் ஏற்பட்டுள்ளன.

இதுவரை அம்பாறை பிராந்தியத்தில் 03 டெல்டா நோயாளிகளும் கண்டுபிடிக்கப்பட்டனர் எனவும் அவர்கள் சிகிச்சையில் நலமாகவே தற்சமயம் உள்ளனர் .

கிழக்குமாகாணத்தில் வழமைக்குமாறாக கடந்த 24 மணிநேரத்தில் 191 தொற்றுகளும் 3 மரணங்களும் ஏற்பட்டுள்ளன. டெல்டாவின் பிரசன்னமும் நிகழ்ந்துள்ளது. இது கிழக்கில் மற்றுமொரு பேராபத்து நெருங்குவதை கட்டியம்கூறிநிற்கிறது என்றும் கூறினார்.

இந்த 191தொற்றுக்களில் அம்பாறைப்பிராந்தியத்தில் அதிகூடிய 156 தொற்றுக்களும் கல்முனைப்பிராந்தியத்தில் 35 தொற்றுக்களும் ஏற்பட்டுள்ளன.

அம்பாறைப்பிராந்தியத்தில் அதிகூடிய 48 தொற்றுக்கள் உகனைப்பிரதேசத்திலும் 41தொற்றுக்கள் தெஹியத்தகண்டியவிலும் ஏற்பட்டுள்ள அதேசமயம் கல்முனைப்பிராந்தியத்தில் அதிகூடிய 15 தொற்றுக்கள் நிந்தவூர்ப்பிரதேசத்திலும் ஏற்பட்டுள்ளன.

இறுதியாக இடம்பெற்ற 3 மரணங்கள் அவை அக்கரைப்பற்று நாவிதன்வெளிதமன பிரதேசங்களில் சம்பவித்துள்ளன.

இதுவரை ஏற்பட்ட தொற்றுக்கள் ஏறுவரிசைப்படி பார்த்தால் அம்பாறை பிரிவில் 4,152தொற்றுக்களும் 42 மரணமும் கல்முனை சுகாதாரப்பிராந்தியத்தில் 4,488 தொற்றுக்களும் 93 மரணங்களும் திருகோணமலை மாவட்டத்தில் 5,499 தொற்றுக்களும் 155 மரணங்களும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 9,201தொற்றுக்களும் 125 மரணங்களும் ஏற்பட்டுள்ளன.

கடந்தசில நாள்களாக நாட்டின் ஏனைய மாகாணங்களில் சடுதியாக ஏற்பட்டுள்ள சடுதியான நோயாளர் மற்றும் மரணங்களின் அதிகரிப்பு கிழக்கு மாகாணத்திலும் ஏற்பட்டு வருவதைக்காணக் கூடியதாகவுள்ளது.

கடந்தவாரங்களில் கிழக்கில் 200-250நோயாளர்களும் 2-3 மரணங்கள் ஏற்பட்டிருந்தன. ஆனால் தற்போது அத்தொகை மும்மடங்காக மாறிவருகிறது. இது கிழக்கு மாகாணத்திற்கு அபாய அறிவிப்பாக கருதமுடியும்.

இதனை கருத்திற் கொண்டு மக்கள் அவதானத்துடன் சுகாதார வழிமுறைகளை இறுக்கமாக கடைப்பிடிக்கவும், சமூக இடைவெளிகளை பேணுதல், முகக்கவசம் அணிதல், கைகளை அடிக்கடி சவர்க்காரம் இட்டு கழுவுதல் போன்ற விடயங்களை அரசின் கட்டுப்பாடுகளுக்கு அமைய நடந்து கொள்ள வேண்டும்.

தடுப்பூசியைப் பெற்றுவிட்டோம் என்ற நினைப்பில் சுகாதார நடைமுறைகளில் ஒருவித தளர்வை கடைப்பிடிப்பதாகவே பார்க்கிறோம். எனவே தயவுசெய்து அனைவரும்தொடர்ச்சியாகசுகாதார நடைமுறைகளை இறுக்கமாகக் கடைப்பிடிக்க வேண்டும்.என்றார்.



போதைப்பொருள்களுடன்

# காத்தான்குடியில் மூன்று பேர் கைது

ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப்பொருள்களுடன் காத்தான்குடி பொலிஸ் பிரிவில்நேற்றுகாலைமூவர் கைது செய் யப்பட்டுள்ளனர் என காத்தான் குடி பொலிஸ்நிலையபொறுப்பதிகாரி துமிந்த நயனசிறி தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுதத் மாசிங்கவின் பணிப்புரையின் பேரில் மட்டக்களப்பு பிரிவு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எல்.ஆர்.குமாரசிறியின் வழிகாட்டலில் காத்தான்குடி டெலிகொம் வீதியில் 5 கிராம் மற்றும் 900 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளுடன் இருவரும் கர்பலா பிரதேசத்தில் 180 மற்றும் 160 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் இருவருமாக மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட நபர்கள் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளமையுடன் காத்தான்குடி பொலிஸார் மேலதிகன விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஓட்டமாவடியில் சடலங்களைப் புதைக்க இடம் இல்லையாம்

கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழந்தவர்களின் ஜனாஸாக்கள் மற்றும் உடல்கள் அடங்கலாக, 1,437 பேர் மட்டக்களப்பு ஓட்டமாவடி சூடுபத்தினசேனையில் அடக்கம் செய்யப்பட்டுள்ளனர். கடந்த ஞாயிற்றுக் கிழமை வரை மட்டுமே 1,437 பேர் அடக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

'25 க்கு மேற்பட்ட உடல்கள் நாளாந்தம் வந்த வண்ணமிருக்கின்றன. ஆகையால், இனிவரும் நாள்களில் உடல்களை அடக்கம் செய்ய இடம் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது' என ஓட்டுமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம். நௌவ்பர் கவலை தெரிவித்துள்ளார்.

நாட்டில் கொரோனாத் தொற்றினால் உயிரிழந்தவர்களின் ஜனாஸாக்கள் மற்றும் உடல்களை அடக்கம் செய்ய அடையாளப்படுத்தப்பட்ட ஒரே ஒரு இடம் ஓட்டுமாவடி பிரதேச சபை எல்லைக்குள் உள்ள பகுதியான மஜீமா நகர் சூடுபத்தினசேனை இந்த பொது மயானத்திலே இந்த உடலகங்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுவருகின்றன. இதனை எமது சபை பொறுப்பேற்று மனிதவலு, இயந்திரவலு என்பவற்றை பயன்படுத்தி மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவருகின்றது. இதற்கு இராணுவத்தினர், சுகாதாரப் பணியாளர்கள் ஒத்துழைப்புக்களை வழங்கிவருகின்றனர். இந்த நிலையில் இந்த உடல்களை அடக்கம் செயவதற்கு 3 ஏக்கர் காணியை அடையாளப்படுத்தி அதில் உடல்கள் அடக்கம் செய்யப்பட்டன. இந்த காணி போதாது என அதனுடன் இணைந்த மேலும் இரண்டு ஏக்கர் காணியை அடை யாளப்படுத்தி 5 ஏக்கர் காணியில் சடலங்கள் அடக்கம் செய்யப்பட் டன. இந்துக்களின் 40 உடல்கள், கிறிஸ்தவர்களின் 28 உடல்கள், பௌத்தர்களின் 21 உடல்கள் உட்பட, ஓகஸ்ட் 8ஆம் திகதிஞாயிற்றுக்கிழமைவரையிலும் 1,437 பேரில் உடல்கள் அடக்கம் செய்யப் பட்டுள்ளன.

இதில் அடக்கம் செய்யப்பட்ட இடங்களில் அடையாள கல்கள் நாட்டப்பட்டு இலக்கங்கள் இடப்பட்டு அந்த இலக்கங்களின் உடல்கள் யாருடையது என்ற பெயர் விவரங்கள் தயாரிக்கப்பட்டு பிரதேச சபையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த 5 ஏக்கர் காணியிலே இன்னும் சுமார் 500 உடல்கள் மட்டுமே அடக்கம் செய்யமுடியும். இருந்தபோதும் தற்போது கொரோனாவின் தாக்கம் அதிகரித்துள்ளதால் நாளாந்தம் 25 அல்லது 30 உடல்கள் நாடளாவிய ரீதியில் இருந்து வருகின்றன காரணமாக இன்னும் ஒரு சில நாள்களில் இந்த இடம் முடிந்துவிடும்.

மாற்று இடத்துக்கு எங்கு செல்வதுஎன்றநிலைஏற்பட்டுள்ளது எனவே, உடனடியாக ஓரிடத்தை தெரிவு செய்ய வேண்டிய அவசர நிலை ஏற்பட்டுள்ளது என்றார்



# மாமாங்கேஸ்வரர் நிர்வாகசபைக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தாக்கல்

நேற்று முன்தினம் ஆடி அமாவாசை தீர்த்தோற்சவம் இடம்பெற்றபோது அதிகளவான பக்தர்கள் ஒன்றுகூடி தீர்த்தமாடியமை தொடர்பாக சுகாதாரப் பரிசோதகரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.சி ரிஷ்வான் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்ட குறித்த வழக்கில் மாமாங்கேஸ்வரர் ஆலய நிர்வாக சபை உறுப்பினர்கள் ஐந்து பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது .

இதன் போது ஒருவருக்கு தலா 20 ஆயிரம் ரூபா அடிப்படையில் 5 பேருக்கும் ஒரு லட்சம் ரூபா வீதம் தண்டப்பணம் விதிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க மூர்த்தி, தலம் மற்றும் தீர்த்தம் ஆகியன ஒருங்கே அமையப் பெற்ற ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலய வருடாந்த உற்சவத்தில் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக 50 பேர் மாத்திரம் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் ஆலய நிர்வாக சபையினரால்மக்களுக்குதெளிவுபடுத்தப்பட்டிருந்தும், வெளிவீதியில் பாதுகாப்பு கடமையில் இருந்த பாதுகாப்புப் படையினர் மற்றும் சுகாதாரப் பரிசோ தகர்களின் கட்டளைகளையும் மீறி பக்தர்கள் அதிகளவில் திரண்டு தீர்த்தமாடியமை குறிப் பிடத்தக்கது.

# வாழைச்சேனையில் இரண்டாவது தடுப்பூசி

கோறளைப்பற்று மத்தி வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவில் இரண்டாவது கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.ரீ.எம்.நஜீப்கானின் வழிகாட்டலில் நேற்று வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலை, மாவடிச்சேனை அல் இக்பால் வித்தியாலயம், செம்மண்ணோடை அல் ஹம்ரா வித்தியாலயம், தியாவட்டவான் அறபா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் இரண்டாவது தடுப்பூசிகள் செலுத்தப்பட்டன.

இதில், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் மற்றும் வர்த்தகர்கள், முச்சக்கர வண்டி சாரதிகள் எனப்பலரும் வருகை தந்து தங்களுக்கான தடுப்பூசிகளை செலுத்திக் கொண்டனர்.

இதன்போது முதலாவது தடுப்பூசிகளை செலுத்திக் கொள்ள தவறவிட்டவர்களுக்கு குறித்த பாடசாலைகளில் முதலாவது தடுப்பூசிகளும் செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு கடற்படைத் தளபதிக்கும் ஆளுநருக்கும் இடையில் சந்திப்பு



கிழக்கு கடற்படைப் பகுதியின் புதிய தளபதி ரியர் அட்மிரல் சஞ்சீவ டயஸ் நேற்று பிற்பகல் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தை திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் வைத்து சந்தித்தார்.

சஞ்சீவ டயஸ் பதவியேற்ற பிறகு ஆளுநரை சந்திப்பது இதுவே முதல் தடவையாகும். இதன்போது ஆளுநருக்கும் . சஞ்சீவ டயஸுக் கும் இடையே ஒரு சிறப்பு கலந்துரையாடலும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் அணியில் விளையாடுவதற்கு மெஸ்சி ஒப்பந்தம்



21 ஆண்டுகள் பார்சிலோனா அணிக்காக விளையாடிய நட்சத்திர கால்பந்து வீரர் மெஸ்சி, அந்த அணியில் இருந்து விலகுகிறேன் என அண்மையில் தெரிவித்தார். ஆர்ஜென்டினாவின் நட்சத்திரக் கால்பந்து வீரரான லியோனல் மெஸ்சி 13 வயதுச் சிறுவனாக பார்சிலோனா அணியில் சேர்ந்தார். 778 ஆட்டங்களில் அந்த அணிக்காக 682 கோல்கள் அடித்துள்ளார். தனிப்பட்ட கழக அணிக்காக பீலே அடித்த 643 கோல் என்ற சாதனையை முறியடித்து மெஸ்சி புதிய சாதனையும் படைத்தார். அந்த அணிக்காக 34 வெற்றிக் கோப்பைகளையும் பெற்றுத் தந்துள்ளார்.

பார்சிலோனாவுக்காக அதிக கோல்கள் அடித்து சாதனை படைத்த மெஸ்சி, கால்பந்து வரலாற்றில் அதிக ஊதியம் பெறும் வீரராக வலம் வந்தார். மெஸ்சிக்கு வழங்கப்படும் சம்பளம் கடும் நிதி நெருக்கடியை ஏற்படுத்தியதால் பார்சிலோனா நிர்வாகம் அவரது ஒப்பந்த காலத்தை நீடிக்க முன் வரவில்லை. வாழ்நாளில் பெரும்பகுதி பார்சிலோனாவிற்காக விளையாடிய நிலையில் அணி நிர்வாகத்தின் இந்த முடிவை தான் எதிர்பார்க்கவில்லை என நிருபர்கள் கூட்டத்தில் மெஸ்சி கண்ணீருடன் தெரிவித்தார்.

இந்த நிலையில், பரிஸ் செயின்ட் ஜெர்மைன் (பி.எஸ்.ஜி.) அணிக்காக விளையாட மெஸ்சி ஒப்பந்தம் செய்துள்ளார் என செய்திகள் வெளியாகியுள்ளன. 2 ஆண்டுகளுக்கு அந்த அணியில் விளையாடுவதற்கு மெஸ்சி ஒப்பந்தம் ஆகியுள்ளார் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## ரி–20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடருக்கான நியூசிலாந்து அணி அறிவிக்கப்பட்டது



வரும் ஒக்டோபர் - நவம்பர் மாதங்களில் நடைபெறவிருக்கும் ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடருக்கான தனது அணியை நியூசிலாந்து அறிவித்துள்ளது.

ஐக்கிய அரபு அமீரத்தில் ஐ.பி.எல். தொடரின் இரண்டாம் பகுதி முடிவடைந்த பின்பு ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் டுபாய் மற்றும் ஓமன் நாடுகளில் ஒக்டோபர் - நவம்பர் மாதங்களில் நடைபெறவுள்ளன. இந்தத் தொடரில் சூப்பர் 12 மற்றும் முதல் சுற்று ஆட்டங்களில் விளையாடவுள்ள அணிகளின் பட்டியலை சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டுவிட்டது

சூப்பர் 12 சுற்றுக்கான அணிகள் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. பிரிவு 1 இல் இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் உள்ளன. இந்த அணிகளோடு, குரூப் A தகுதிச் சுற்று வெற்றியாளரும், குரூப் B தகுதிச் சுற்றின் இரண்டாமிடம் பெறும் அணியும் இணைந்து கொள்ளும்.

பிரிவு 2 இல், இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், நியூசிலாந்து அணிகள் உள்ளன. குரூப் B தகுதிச் சுற்று வெற்றியாளரும், குரூப் A தகுதிச் சுற்றின் இரண்டாமிடத்துக்கு வரும் அணியும் இவற்றோடு இணைந்துகொள்ளும்.

அனைத்து அணிகளுக்கும் முன்னோடியாக தனது ரி-20 உலகக் கிண்ணத்துக்கான அணியை அறிவித்துள்ளது நியூசிலாந்து கிரிக்கெட் சபை. கேன் வில்லியம்சன் தலைமையிலான நியூசிலாந்து அணியில் மூன்று சுழற்பந்துவீச்சாளர்களுடன் மொத்தம் 15 பேர் இடம்பெற்றுள்ளனர். வீரர் யாரும் காயமடைந்தால் அவருக்கான மாற்று வீரராக அடம் மில்னெ பெயரிடப்பட்டிருக்கிறார்.

நியூசிலாந்து அணி விவரம்: கேன் வில்லியம்சன் (அணித்தலைவர்), ரொட் அஸ்லே, ட்ரெண்ட் போல்ட், மார்க் சப்மன், டொவொன் கொன்வே, லூக்கி பெர்கியூசன், மார்டின் கப்டில், ஜேமிசன், டரில் மிட்சல், ஜிம்மி நீஷம், கிளென் பிலிப்ஸ், மிட்சல் சன்ட்னர், டிம் செய்ஃப்ரெட், இஷ் சோதி, டிம் சவுத்தி, அடம் மில்னெ (மாற்று வீரர்)

## 2028 ஆம் ஆண்டு ஒலிம்பிக்கில் கிரிக்கெட் சர்வதேச கிரிக்கெட் சபை தீவிர முயற்சியில்

2028ஆம் ஆண்டு அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸில் நடைபெறவுள்ள ஒலிம்பிக்கில் கிரிக்கெட் விளையாட்டை சேர்த்துக் கொள்ள முயற்சிகளைமேற்கொண்டுவருவதாக சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) அறிவித்துள்ளது.



இது குறித்து சர்வதேச கிரிக்கெட் சபையின் தலைவர் கிரேக் பார்கிலே கூறுகையில், ‘அமெரிக்காவில் 3 கோடி கிரிக்கெட் ரசிகர்கள் உள்ளார்கள். இதனால் ஒலிம்பிக்கில் கிரிக்கெட் பங்கேற்பது பொருத்தமாக இருக்கும். ஆனால், அது அவ்வளவு எளிதல்ல. ஒலிம்பிக்கில் இணைந்து கொள்ள பல அற்புதமான விளையாட் டுகள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. எனினும் கிரிக்கெட்டைச் சேர்க்க இதுவே சரியான நேரம். ஒலிம்பிக்ஸூம் கிரிக்கெட்டும் நல்ல கூட்டணியாக அமையும்’ என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இதற்கு முன்பு 1900ஆம் ஆண்டு பரிஸ் ஒலிம்பிக்கில் மட்டுமே கிரிக்கெட் பங்கேற்றுள்ளது. அதிலும் இங்கிலாந்தும் பிரான்ஸூம் மட்டும் விளையாடின. 128 வருடங்களுக்குப் பிறகு ஒலிம்பிக்கில் கிரிக்கெட் விளையாட்டை மீண்டும் சேர்க்க ஐ.சி.சி. முயற்சி மேற்கொண்டு வருகிறது. அடுத்த வருடம் பேர்மிங்ஹாமில் நடைபெறவுள்ள 2022ஆம் ஆண்டு பொதுநலவாய விளையாட்டுப் போட்டியில் கிரிக்கெட் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆஸ்திரேலியாவை ரி–20 தொடரில் புரட்டியெடுத்தது பங்களாதேஷ்!







ஆஸ்திரேலிய அணிக்கெதிரான ரி-20 தொடரை முதல் முறையாக வென்று பங்களாதேஷ் கிரிக்கெட் அணி சாதனை படைத்துள்ளது.

டாக்கா மைதானத்தில் நேற்ற நடைபெற்ற ஐந்தாவதும் இறுதியுமான ரி-20 போட்டியில், பங்களாதேஷ் அணி 60 ஓட்டங்களால் வெற்றிபெற்றதன் மூலம் தொடரை 4-1 என்ற கணக்கில் கைப்பற்றி இந்த வரலாற்றுச் சாதனையைப் பதிவு செய்துள்ளது.

தொடரின் முதல் மூன்று போட்டிகளையும் தொடர்ச்சியாக வென்று தொடரைத் தனதாக்கியது பங்களாதேஷ் அணி. நான்காவது போட்டியில் ஆஸ்திரேலியா வெற்றிபெற, ஐந்தாவது போட்டியை பங்களாதேஷ் வென்றது.

இந்தப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து, 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகளை இழந்து, 122 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. மொஹமட் நயிம் 23 ஓட்டங்களையும் மஹ்மதுல்லா 19 ஓட்டங்களையும் எடுத்தனர். ஆஸ்திரேலிய அணியின் நதன் எலீஸ் மற்றும் டான் கிறிஸ்டியன் இருவரும் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 123 என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி, 13.4 ஓவர்கள் நிறைவில் 62 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து 60 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது. மத்தியு வேட் 22 ஓட்டங்களை எடுத்தார். பங்களாதேஷ் அணியின் சகிப் அல் ஹசன் 4 விக்கெட்டுகளையும் மொஹமட் சய்புடின் 3 விக்கெட்டுகளையும் நசும் அஹ்மட் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். இந்தப்போட்டியின் ஆட்டநாயகனாகவும் தொடரின் நாயகனாகவும் பங்களாதேஷ் அணியின் சகிப் அல் ஹசன் தெரிவு செய்யப்பட்டார்.

இந்தத் தொடருக்கு முன்னர் நான்கே நான்கு ரி-20 போட்டிகளில் ஆஸ்திரேலிய அணியை எதிர்த்து விளையாடியிருந்த பங்களாதேஷ் அணி, அனைத்திலும் தோல்வியடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வைத்தியசாலைகளில் நெருக்கடி குறித்து வெளியான படங்கள் பொய்யானவையல்ல



## வைத்திய நிபுணர் தகவல்

நாட்டின் சில வைத்தியசாலைக ளில் தொற்றாளர்கள் அதிகரிப்பால் காணப் படும்நெரிசல்தொடர்பில்வெளியாகியுள்ள சில படங்கள் அல்லது காணொலிகள் போலியானவை அல்ல என அரச மருந் தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் பிரசன்ன குணசேன குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டுள் ளார்.

மேலும் தெரிவிக்கையில்

தற்போது நாட்டில் நாளாந்தம் 2 ஆயி ரத்துக்கும் அதிகமான தொற் றாளர்கள் இனங்காணப்பட்டுள்ள மையோடு, நூறை அண்மித்தளவில் மரணங்கள் பதிவாகின்றன.

சுமார் 30 ஆயிரம் தொற்றாளர்கள் சிச்சைபெற்று வருகின்ற இந்த நிலைமை கடந்த ஒன்றரை ஆண்டுடன் ஒப்பிடும் போது மிகவும் அபாயமுடையதாகும். ஆரம்பத்தில் இனங்காணப்பட்ட கொவிட் - 19 வைரஸ் அல்லது அல்பா வைரஸ் 50 வீத வேகத்தில் பரவக் கூடியது.

ஆனால் தற்போது இனங்காணப் பட்டுள்ள டெல்டா வைரஸ் நூறு வீதம் வேகமாக பரவக்கூடியது. வைரஸ் தொற் றால் ஏற்படக் கூடிய பாரதூரமான நிலை மையைத் தடுப்பதற்கு எந்தவொரு தடுப்பூசியையேனும் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இதன் மூலம் மரணங்களின் எண்ணிக்கையையும் குறைக்க முடியும். மேல் மாகாணத்தில் நாட்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மூன்று தினங்களுக்குள் தடுப்பூசி வழங்கும்பணிகள்நிறைவுசெய்யப்படும்.

1906 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து தமது விவரங் களை வழங்கி தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ள முடியும். இரு கட்டங்களாகவும் தடுப்பூசியைப் பெற்று இரு வாரங்களின் பின்னரே முழுமையான நோய் எதிர்ப்பு சக்தி உருவாகும்.

எனவே தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டவர்கள் முகக்கவசம் அணியா மல்நடமாடுகின்றமைபாதுகாப்பானதல்ல.

வைரஸ் தொற்றுக்கு உள்ளாகும் போது உடலில் வைரஸ் மேலும் வளர்ச் சியடையாமல் தடுப்பதே தடுப்பூசியின் செயற்பாடாகும். கொவிட்-19 வைரஸ் மாதத்திற்கு இரு தடவைகள் அதன் புரோட்டினை மாற்றியமைக்கும்.

இதன் போதே டெல்டா, அல்பா, பீட்டா, காமா போன்ற திரிவடைந்த வைரஸ்கள் தோற்றம் பெற்றன. தொடர்ச்சியாக இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறும் போது டெல்டாவைப் போன்ற பிரிதொரு திரிவு உருவானால் அது பாரதூரமான அபாயம் மிக்கதாக காணப்படும் என்பதோடு, வைரஸ் கட்டுப்படுத்தல் செயற்பாடுகளையும் மீண்டும் ஆரம்பத்தி லிருந்து தொடங்க நேரிடும்.

மூன்றாம் கட்ட தடுப்பூசி உலக சனத்தொகையில் 40 சதவீதமானோ ருக்கு இவ்வாண்டு டிசெம்பர் மாதத் துக்குள் முதற்கட்டமாக தடுப்பூசி வழங் கும் பணிகளை நிறைவு செய்வதற்கும், இரண்டாம் கட்டமாகவும் 70 சதவீதமா னோருக்கு தடுப்பூசி வழங்கும் பணி களை 2022 ஜூன் மாதத்தில் நிறைவு செய்வதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்ட தடுப்பூசி வழங்கலை அடுத்த ஆண்டு ஜூனில் நிறைவடையச் செய்ய எதிர்பார்த்துள்ளதால் தற்போது மூன்றாம் கட்ட தடுப்பூசி குறித்த உலக சுகாதார ஸ்தாபனம் எவ்விதக் கருத்தை யும் வெளியிடவில்லை.

எவ்வாறிருப்பினும் இரு கட்டங்களாக வும் தடுப்பூசியைப் பெற்ற போதிலும், தொற்றுக்கு உள்ளாகும் நபர்களைக் கொண்டு அவ்வாறானவர்களுக்கு மூன்றாம் கட்டமாக தடுப்பூசியொன்று ஒதுக்கப்பட வேண்டுமா என்பது தொடர் பில் ஆராய்ந்து வருகின்றன.

இலங்கையில் அவ்வாறான செயற் பாடுகள் எவையும் இதுவரையில் முன் னெடுக்கப்படவில்லை. 18 - 30 வயதுக்கு இடைப்பட்டோருக்கு விரைவில் தடுப்பூசி வழங்கப்படும். 18 - 30 வயதுக்கு இடைப் பட்டோருக்கு இம்மாதத்தின் இடைப்பகுதி யில் அல்லது மாத இறுதிக்குள் முதற்கட்ட தடுப்பூசி வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்படும். இந்த வயதுக்கு இடைப்பட்டோர் சுமார் 27 - 30 லட்சம் மாத்திரமே உள்ளனர்.

எனவே செப்டெம்பர் மாதத்தின் இடைப்பகுதிக்குள் அவர்களுக்கான முதற்கட்ட தடுப்பூசியை வழங்கும் பணி களை நிறைவு செய்ய எதிர்பார்த்துள் ளோம்.

இலங்கையில் தொற்றுறுதி செய்யப் படும் மொத்தத் தொற்றாளர்களில் மூன் றில் ஒரு பங்கினர் இந்த வயதெல்லைக்கு உட்பட்டவர்களாக உள்ளனர். எனினும் இவர்கள் உயிரிழக்கும் வீதம் மிகக் குறைவாகவே உள்ளது.

இந்த நிலைமையை தொடர்ந்தும் பேணும் வகையில் அவர்களுக்கான தடுப்பூசி வழங்கும் பணிகளும் துரித மாக முன்னெடுக்கப்படும். எவ்வாறிருப் பினும் ஆடை தொழிற்சாலை உள்ளிட்ட வற்றில் 18 - 30 வயதுக்கு இடைப்பட் டோருக்கு தடுப்பூசி வழங்கும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனக் குறிப்பிட்டுள்ளார்.

# முல்லையில் தொற்றாளர் அதிகரிப்பு புதுக்குடியிருப்பு சந்தைக்குப் பூட்டு

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு சந்தை, முல்லைத்தீவுசந்தை, ஒட்டுசுட்டான்பிரதேசசெயலகங்களில் 9 பேருக்கு கொவிட் தொற்று காணப்பட்டுள்ளமையைத் தொடர்ந்து புதுக்குடியிருப்பு சந்தை நடவடிக்கை மூன்று நாள்களுக்கு இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பொதுச்சந்தையில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் போது 7 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்தொற்றாளர்கள் பலருடன் தொடர்புபட்டிருப்பதால் மேலும் பலருக்குத் தொற்று ஏற்பட வாய்ப்பு இருப்பதாகச் சுகாதார வைத்திய அதிகாரி எம். கெங்காதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

எனவே பொதுமக்கள் நோய்த்தொற்றைத் தடுக்க பொதுச்சந்தைக்கு செல்வதைத் தவிர்க்குமாறும், அத்தி யாவசிய தேவை தவிர வெளியில் செல்வதைத் தவிர்த்துக் கூட்டுச் சேராமல் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி வீட்டில் இருக்குமாறும் சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

புதுக்குடியிருப்பு சந்தை உள்ளிட்ட நகர்ப்பகுதியில் உள்ள வணிக நிலையங்களில் சீட்டுப் பிடிக்கும் நபர் ஒருவரும் இதற்குள் அடங்குகின்றமையால் அவர் பலருடன் தொடர்பைப் பேணியுள்ளார் என மக்கள் தெரிவித்துள்ளார்கள்.

இன்று புதன்கிழமை புதுக்குடியிருப்பு சந்தை வணிகர் களுக்கான பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படவுள் ளது என சுகாதாரத் தரப்பினர் தெரிவித்துள்ளார்கள்.

இதேவேளை முல்லைத்தீவு சந்தையில் வணிகர் ஒருவருக்கும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் திட்ட மிடல் கிளையில் பணியாற்றும் உத்தியோகத்தர் ஒருவருக்கும் கொவிட் தொற்று இனம் காணப்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்கு மக்கள் செல்வது மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன், திட்டமிடல் கிளையில் பணியாற்றும் 20 உத்தியோகத்தர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன் முடிவுகளின் அடிப்படையிலேயே அடுத்த கட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.



# 2 ஆம் கட்ட கொரோனாத் தடுப்பூசிகள் வவுனியாவில் முன்னுரிமை அடிப்படையில்

## திலீபன் எம்.பி. திட்டம் வகுப்பு

வவுனியா மாவட்டத்திற்கு இரண்டாம் கட்ட தடுப்பூசிகளை முன்னுரிமை அடிப்படையில் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன் தெரிவித்துள்ளார்.

பதில் அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார் தலைமை யில் வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற கொவிட் நிலைமை தொடர்பான கலந்துரையாடலின் பின் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

வவுனியா மாவட்டத்தில் கொவிட் பரம்பலைத் தடுப்பது தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்றது. இரண்டாம் கட்ட தடுப்பூசிகள் வழங்கல் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் 16 லட்சம் தடுப்பூசிகள் ஜனாதிபதி யால் வழங்கப்பட்டன. முன்னுரிமை அடிப்படையில் அதை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சுகாதாரத் திணைக்களத்துக்கும், அரச உத்தியோகத் தர்களுக்கும் இடையில் காணப்படும் இடைவெளி காரணமாக மக்கள் பாதிக்கப்படுகிறார்கள்.

இதனால் அதனைக் களைந்து செயற்படுமாறு அறிவுறுத்தல் வழங்கியுள்ளேன். கட்டுப்பாட்டிலிருந் தது போல் மாகாணப் போக்குவரத்து முடக்கம் வரக் கூடிய வாய்ப்பு உள்ளது. ஆனால் நாடு முடக்கப்படுவ தற்கான சாத்தியம் இல்லை. வவுனியா மாவட்டத்தில் தான் அதிகளவிலான தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன. மக்கள் அதனைப் பெற்றுப் பாதுகாப்பாக இருக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் மாவட்ட அபிவிருத் திக் குழுத் தலைவர் கு.திலீபன், இராணுவத்தினர், பொலிஸார், அரச அதிகாரிகள், சுகாதாரத் திணைக் களத்தினர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டமை யுடன், மாவட்டத்தின் கொவிட் நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்துள்ளனர்.

# பிரதமராக பதவியேற்று ஓராண்டு பூர்த்தி; இந்திய – இலங்கை ஆசீர்வாதப் பூஜை

பிரதமர் பதவியேற்று ஓராண்டு பூர்த்தியை முன் னிட்டும் கொவிட் தொற்று நிலைமை காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு ஆசீர்வாதம் வேண்டி யும் நேற்று திங்கட்கிழமை இந்தியாவிலுள்ள சாரநாத் மூல கண்டி குடி விகாரையில் இடம்பெற்ற 'இலங்கை - இந்திய ஆசீர்வாத பூஜை' நிகழ்வில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அலரி மாளிகையிலிருந்து சூம் தொழில் நுட்பம் ஊடாக கலந்து கொண்டார்.

இந்திய மஹா போதி சங்கத்தின் தலைமையில் இந் திய - இலங்கை நட்புறவு சங்கம் மற்றும் இலங்கைக் கான இந்திய உயர் தூதரகம் ஆகியன இணைந்து இந்த விஷ்வ ஆசீர்வாத பூஜையை ஏற்பாடு செய்தி ருந்தன.

இந்திய மஹா போதி சங்கத்தின் பொதுச் செயலாளர் பெலவத்த சீவலி தேரரின் அறிவுரை அனுசாச னத்துக்கமைய இடம்பெற்ற இந்த விசேட இலங்கை - இந்திய ஆசீர்வாத பூஜை நிகழ்வில் இந்திய மஹா போதி சங்கத்தைச் சேர்ந்த அனைத்து விகாராதிபதிகளும் இணைந்து கொண்டனர்.

அதற்கமைய இந்திய மஹா போதி சங்கத்தின் சாரநாத், லும்பினி, கொல்கத்தா, லக்னவ் மற்றும் புத்தகயா விகாரைகளிலிருந்து மஹா சங்கத்தினர் இந்த ஆசீர்வாத பூஜையில் பங்குபற்றினர்.

குறித்த சந்தர்ப்பத்தில் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே உள்ளிட்ட இரு நாடுகளினதும் உயர் தூதரக பிரதானிகள் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.08.2021இல் வெளியிடப்பெற்றது.